1995 மார்ச் 30]

178—

இளையான்குடி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்தல்

*** 26175—திரு மா. சா. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், இளையான்குடி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. மா. சா. மா. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளையான்குடி ஒன்றியம் 56 ஊராட்சிகளைக் கொண்ட ஒன்றியம். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திலேயே மிகப்பெரிய ஒன்றியம் ஆகும். மேலும் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் இருக்கிற இளையான்குடி பேரூராட்சியானது மேற்குப் பகுதியில் ஒரு ஓரத்தில் உள்ளது. கிழக்குப் பகுதியான சாலை கிராமம் பகுதியிலிருந்து இளையான்குடியில் உள்ள அலுவலகத்திற்கு வந்து செல்வதற்கு பொதுமக்கள் மிகுந்த சிரமப்படுகிறார்கள். இதைத்தவிர ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசால் ஒதுக்கீடு செய்யப்படுகிற நிதியானது அனைத்து ஒன்றியங்களுக்கும் கிட்டத்தட்ட சம அளவில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதனால் இளையான்குடி போன்ற பெரிய ஒன்றியங்களுக்கு போதுமான நிதி கிடைக்காமல் மிக பாதிப்புக்குள்ளாக நேரிடுகிறது. எனவே, அந்த ஒன்றியத்தின் நலனைக் கருத்திற்கொண்டு சாலைகிராமத்தை தலைமையிடமாகக் கொண்டு இளையான்குடி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது செயல்படுத்தப்பட்டுள்ள இந்திய அரசமைப்பு 73-வது சட்ட திருத்தத்தின்படி இப்படிப்பட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள், மாநகராட்சிகள் ஆகியவற்றை அமைப்பது, தரம் உயர்த்துவது, பிரிப்பது போன்ற கருத்துருக்கள் தற்காலிகமாக அரசால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. காரணம், இந்தப் புதிய இந்திய அரசமைப்பு திருத்த சட்டத்தின்படி இன்றைக்கு உள்ளாட்சி

அமைப்புகள் பொறுப்பேற்கும் வரை பிரிக்கிற நிலையை உருவாக்கினோம் என்றால், உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்துவது தாமதமாகிற நிலை ஏற்படும். ஆகவே, அதைக் கருத்திற்கொண்டு உள்ளாட்சி அமைப்புகள் பொறுப்பேற்கும் வரை இப்படி பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் அல்லது ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிப்பதோ அல்லது தரம் உயர்த்துவதோ தள்ளி வைக்கலாம் என்ற அரசாணை 11-11-1993 நாளிட்ட ஊரக வளர்ச்சித் துறை எண் 241-ல் ஆணையிடப்பட்டிருக்கிறது. மேற்படி நிலையில் வினாவில் கூறிய பொருள் தொடர்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைக்கு தற்போது நடவடிக்கை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 179, டாக்டர் மு. காளிராஜன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

179—

மாங்குளம் ஊராட்சியில் தொடக்கப்பள்ளி துவங்குதல்

***22330—டாக்டர் மு. காளிராஜன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு மாங்குளம் ஊராட்சி, மீனாட்சிபுரம் காலனியில் ஒரு தொடக்கப்பள்ளி துவங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு.எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை அரசால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

டாக்டர் மு. காளிராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்கள் அதிகம் வாழ்கிற மாங்குளம் ஊராட்சி, மீனாட்சிபுரம் காலனியில் ஆதிதிராவிடர்கள் கல்வியில் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்துடன் மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அந்தப் பகுதிக்கு ஒரு தொடக்கப்பள்ளி